அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 10/2025 (I)

எனது இலக்கம் : EST-5/04/PCY/0041(i)
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.04.24

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>2025 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவிற்கமைய அரச சேவையில் சம்பளத் திருத்தம்</u>**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் பால் தங்களது அவதானத்தை ஈர்க்கின்றேன்.

02. அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுள் பின்வரும் ஏற்பாடுகள் திருத்தியமைக்கப்படுகின்றன.

I. அச்சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைச் சுங்கத்தின் கீழான பதவிகளின் பட்டியல் மற்றும் மருத்துவத்திற்கான துணை சேவைகளின் சேவை (பேச்சு சிகிச்சையாளர்/ ஒலிப்பதிவு தொழில்நுட்பவியலாளர்) கீழான பதவிகளின் பட்டியலை இதன் இணைப்பு 01 இல் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தியமைத்தல்.

II. அச்சுற்றறிக்கையின் அட்டவணை VI இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த பயிற்சி கொடுப்பனவுகளுக்குப் பதிலாக, இதன் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த பயிற்சி கொடுப்பனவுகளைப் பயன்படுத்துதல்.

III. இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 2-II ற்குப் பல்வேறு தகைமைகளின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களைச் சம்பளத்தில் நிலைப்படுத்த வேண்டிய முறையினை இதன் இணைப்பு 03 இன் பிரகாரம் மேற்கொள்ளுதல்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி : 011 2 673 330
தொலைநகல் : 011 2 692 158
மின்னஞ்சல் முகவரி : ad-5-est@pubad.gov.lk

இணைப்பு 01

அட்டவணை I

**<u>இலங்கைச் சுங்கத்தின் கீழான பதவிகளின் பட்டியல் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.</u>**

| **සේවාව/තනතුර** | **சேவை / பதவி** | **Service/ Post** | **Salary Code** |
|---|---|---|---|
| ප්‍රධාන රේගු පරීක්ෂක | பிரதான சுங்கப் பரிசோதகர் | Chief Inspector of Customs | RS 3 - 2025 |
| රේගු පරීක්ෂක (I ශ්‍රේණිය) | சுங்கப் பரிசோதகர் (தரம் I) | Inspector of Customs (Grade I) | RS 2 - 2025 |
| රේගු පරීක්ෂක (II ශ්‍රේණිය) | சுங்கப் பரிசோதகர் (தரம் II) | Inspector of Customs (Grade II) | RS 1 - 2025 |
| රේගු නියාමක (විශේෂ ශ්‍රේණිය , I, II ,III ශ්‍රේණි) | சுங்கக் காவலர் (விசேட, தரம் I, II ,III) | Customs Guard (Special Grade, Grade I,II,III) | PL 2 - 2025 |

**<u>மருத்துவத்திற்கான துணை சேவைகளின் சேவை (பேச்சு சிகிச்சையாளர்/ ஒலிப்பதிவு தொழில்நுட்பவியலாளர்) கீழான பதவிகளின் பட்டியல் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.</u>**

| **සේවාව/තනතුර** | **சேவை / பதவி** | **Service/ Post** | **Salary Code** |
|---|---|---|---|
| විශේෂ ශ්‍රේණිය | விசேட தரம் | Special Grade | MT 8-2025 |
| අධි ශ්‍රේණිය, I ශ්‍රේණිය, II ශ්‍රේණිය, III ශ්‍රේණිය | அதி உயர் தரம், தரம் I, தரம் II, தரம் III | Supra Grade, Grade I, Grade II, Grade III | MT 6-2025 |

இணைப்பு 02

அட்டவணை VI

**பயிலுநர் மற்றும் பயிற்சியாளர் பதவிகளுக்கு உரித்தான மாதாந்த கொடுப்பனவுகள் 01.04.2025 ஆந் திகதி முதல் ஒவ்வொரு வருடத்திலும் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.**

| பதவி | | மாதாந்த கொடுப்பனவு | | |
|---|---|---|---|---|
| | | 2025.04.01 ஆந் திகதி முதல் (ரூ.) | 2026.01.01 ஆந் திகதி முதல் (ரூ.) | 2027.01.01 ஆந் திகதி முதல் (ரூ.) |
| 01. | பயிலுநர் மருத்துவ அலுவலர் | 68,380 | 76,465 | 84,550 |
| 02. | மாணவ தாதி | | | |
| | 1 ஆம் வருடம் | 41,317 | 43,274 | 45,230 |
| | 2 ஆம் வருடம் | 41,689 | 43,730 | 45,770 |
| | 3 ஆம் வருடம் | 42,061 | 44,186 | 46,310 |
| 03. | மருத்துவத்திற்கான துணை மற்றும் துணை வைத்திய சேவை | | | |
| | 1 ஆம் வருடம் | 41,317 | 43,274 | 45,230 |
| | 2 ஆம் வருடம் | 41,689 | 43,730 | 45,770 |
| | 3 ஆம் வருடம் | 42,061 | 44,186 | 46,310 |
| 04. | தொழில்நுட்ப சேவை | | | |
| | 1 ஆம் வருடம் | 41,317 | 43,274 | 45,230 |
| | 2 ஆம் வருடம் | 41,689 | 43,730 | 45,770 |

இணைப்பு 03

**<u>இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 2-II ற்குப் பல்வேறு தகைமைகளின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களைச் சம்பளத்தில் நிலைப்படுத்த வேண்டிய முறை</u>**

| | பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் | இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 2-II இற்கான GE 2 - 2025 சம்பள அளவீட்டிற்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலை | |
|---|---|---|---|
| | | படிநிலை | சம்பளம் |
| 01 | இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-I இருந்து இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 2-II ற்குத் தரம் உயர்த்தப்படும் ஆசிரியர்கள் | 01 | ரூ. 66,880/- |
| 02 | இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரகாரம் ஆசிரியர் பயிற்சி மற்றும் பட்டத் தகைமை/ பட்டத் தகைமை மற்றும் பட்டபின்பட்ட கல்வி டிப்ளோமா தகைமை/ கல்வியியல் பட்டத் தகைமை பெற்ற ஆசிரியர்கள் | 03 | ரூ. 69,860/- |
| 03 | இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரகாரம் பட்டத் தகைமையுடன் பட்டபின்பட்ட கல்வி டிப்ளோமா தகைமை மற்றும் கல்வி பட்டபின்பட்ட தகைமை பெற்ற ஆசிரியர்கள் | 05 | ரூ. 72,840/- |